ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

पृथिव्यां पुत्रास्ते जननि बहवस्सन्ति सरळाः
परं तेषां मध्ये विरळतरळोऽहं तव सुतः ।
मदीयोऽयं त्यागस्समुचितमिदं नो तव शिवे
कुपुत्रो जायेत क्वचिदपि कुमाता न भवति ॥

देवीस्तोत्रे ॥

ஹே மாதாவே! இப்புவியில் பலராலும் போற்றக்கூடிய சிறந்த நற்குணம் பொருந்திய அநேகம் புத்திரர்கள் உனக்கு இருக்கின்றார்கள். அவர்கள் மத்தியில் அபூர்வமாயும் சஞ்சலமான சித்தத்தை உடையவனுமான நானும் உனக்குப் புதல்வனாகத் தோன்றியிருக்கிறேன். இவன் முட்டாளாயிருக்கிறானென்று என்னை விலக்கித் தள்ளுவது உனக்கு உசிதமில்லை. ஹே சிவே! கெட்ட பிள்ளைகள் உண்டாகலாம். அந்த பிள்ளையிடம் அன்பில்லாத அன்னை ஓரிடத்திலும் இருக்கமாட்டாள்.

ஹே பரமேசுவரி! ஒரு மாதாவுக்கு அநேக புத்திரர்கள் இருந்தால் எல்லாரும் சிறந்த புத்திசாலிகளாகவே இருக்கிறார்களென்று சொல்லவியலாது. அவர்களுள் யாராவது இரண்டொருவர் முட்டாளாயுமிருக்கலாம். அந்தத் தாயாருக்கு புத்திசாலிகளாய் விளங்கும் பிள்ளைகளிடம் தான் பிரியமென்றும் மந்த புத்தியான புத்திரனிடம் பிரீதியில்லை என்றும் கூறமுடியாது. உண்மையில் அவள் தாயாராயிருப்பின் இந்தப் பிள்ளையிடம் தான் அதிகப் பிரியமிருக்கும். அவ்விதம் நீயும் உலகமாதாவாகையால் மிகவும் மேதாவிகளாய் பலபுத்திரர்கள் இருக்கலாம். அவர்களுக்குள் நான் முட்டாளாயிருக்கிறேனென்று என்னைக் கவனியாமல் விடுவது உசிதமில்லை. முட்டாளான புத்திரனிருப்பது ஸஹஜமே. அதை பரிபாலிக்காமலிருக்கும் தாயார்கள் இருக்கமாட்டார்கள். ஆகையால் நீ என்னைக் கைவிடாமல் ரக்ஷிக்க வேண்டுமென்று ஒரு பக்தர் பராதேவதையிடம் வேண்டுகிறார்.

சுபம்!

ஆர்யதர்மம் உப பத்திராதிபர்.

வேதாந்த ஸாரம்.

(௪௮௪-ம் பக்கத்தொடர்ச்சி.)

அபவாதஸ்வரூப நிரூபணம்.

ரஜ்ஜுவின் விவர்த்தமான ஸர்ப்பத்திற்கு ரஜ்ஜுவாகவே இருக்கும் தன்மைபோல் ஆத்மவஸ்துவின் விவர்த்தமான அக்ஞானம் முதலிய பிரபஞ்சங்களுடைய வஸ்து மாத்திரமாயிருக்கும் தன்மையே அபவாதமாகும். போகங்களையனுபவிப்பதற்கு முக்கிய ஸாதனமாயும் நான்கு பிரகாரமாய் விளங்கும் சகலமான ஸ்தூலசரீரம், போக்கிய ரூபங்களான ஆகாரம் முதலியவைகள் இவைகளுக்கு ஆதாரபூதங்களான பூமி முதலான பதினான்கு உலகங்கள், இவைகளுக்கு ஆதாரமான பிர்மாண்டம் இவையாவும் இவைகளின் உற்பத்திக்குக் காரணபூதங்களான பஞ்சீகிருத பூதஸ்வரூபமாக ஆகின்றன. சப்தம் முதலான விஷயங்களோடு கூடிய இந்தப் பஞ்சீகிருத பூதங்கள் ஸூக்ஷ்ம சரீர ஸமூகம் இவையாவும் இவைகளுக்குக் காரணபூதமான பஞ்சீகாரணம் செய்யப்படாத பூதரூபமாகின்றன. ஸத்வம் முதலான குணங்களோடு கூடிய இந்த அபஞ்சீகிருத பூதங்கள் உற்பத்திக் கிரமத்தை யனுஸரித்து கீழிருந்து முறையே அவையவைகளின் காரணத்தில் லயத்தை யடைந்து ஆதிகாரணமான அக்ஞானோபஹித சைதன்ய ரூபமாக ஆகின்றன. இந்த அக்ஞானோபஹித சைதன்யரூபமானது துரீயமென்று சொல்லப்படும் சுத்தப் பிர்ம ஸ்வரூபமாத்தரமாக ஆய்விடுகின்றது.

இதுவரையில் விஸ்தாரமாய்க் கூறப்பட்ட அத்யாரோப அபாவத நிரூபணங்களால் தத்வம் (தத்+த்வம்) பதார்த்த சோதனமும் ஸித்திக்கின்றது. அஃதெங்ஙனமெனில் அடியில் வருமாறு காண்க:—

அக்ஞானம் முதலான ஸமஷ்டிரூபம் இந்த ஸமஷ்டி உபஹிதமாயும் ஸர்வக்ஞத்வாதி குணங்களோடு கூடியதுமான சைதன்யமும், அக்ஞாநாதிகளால் உபஹிதமில்லாத சுத்த சைதன்யமும் நன்றாய்ப் பழுக்கக் காய்ந்த இரும்பிக்குண்டுபோல் ஒன்றாக விளங்கும் இம்மூன்றும் தத்பதத்திற்கு வாச்யார்த்தமாக ஆகின்றது. இந்த அபிப்பிராயத்தைக் கொஞ்சம் விஸ்தாரமாகக் கூறுகின்றார்.

वाक्ये तत्त्वमसीत्यत्र विद्यते यत्पदत्रयम् ।
तत्रादौ विद्यमानस्य तत्पदस्य निगद्यते ॥ ७७८.

" தத்வமஸி " என்கிற மஹாவாக்கியத்தில் மூன்று பதங்களிருக்கின்றன. அவைகளில் துவக்கத்திலிருக்கும் தத் என்கிற பதத்திற்குப் பொருள் கூறப்படுகின்றது.

शास्त्रार्थकोविदैरर्थो वाच्यो लक्ष्य इति द्विधा ।
वाच्यार्थं ते प्रवक्ष्यामि पण्डितैर्य उदीरितः ॥

சாஸ்திரார்த்தங்களை நன்கறிந்த பண்டிதர்களால் பதங்களுக்கு வாச்யார்த்த மென்றும், லக்ஷ்யார்த்த மென்றும் இருவகையாகக் கூறப்படுகின்றது, அவ்விரண்டிற்குள் தத்பதத்தின் வாச்யார்த்தத்தை உனக்கு அறிவிக்கிறேன்.

समष्टिरूपमज्ञानं साभासं सत्त्वबृंहितम् ।
वियदादिविराडन्तं स्वकार्येण समन्वितम् ॥
चैतन्यं तदवच्छिन्नं सत्यज्ञानादिलक्षणम् ।
सर्वज्ञत्वेश्वरत्वान्तर्यामित्वादिगुणैर्युतम् ॥
जगत्स्रष्टृत्वपातृत्वसंहर्तृत्वादिधर्मकम् ।

सर्वात्मना भासमानं यदमेयं गुणैश्च यत् ।
अव्यक्तमपरं ब्रह्मवाच्यार्थं इति कथ्यते ॥

"ஸமஷ்டி அக்ஞானம், ஆகாயம் முதல் விராட்வரையிலுள்ள தமது கார்யத்தோடு கூடியதும் அக்ஞானுவச்சின்னமாயும் ஸர்வக்ஞத்வாதி குணங்களுடன் கூடியதும் ஸிருஷ்டி, ஸ்திதி ஸம்ஹாரம் முதலான தர்மங்களையுடையதுமான சைதன்யமும், இவ்வித உபாதியற்றுச் சுத்தமாய் விளங்கும் பரப்பிர்மஸ்வரூபமும் "தத்" பதத்திற்கு வாச்யார்த்தமாகக் கொள்ளப்படுகிறது என்று ஆசார்யசாணுளும் அறிவித்திருக்கிறுர்கள். இவ்வித உபஹிதமான சைதன்யத்திற்கு ஆதாரமாயும் அனுபஹிதமுமான சுத்த சைதன்யம் 'தத்' பதத்திற்கு லக்ஷ்யார்த்தமாகின்றது. அக்ஞானம் முதலிய வியஷ்டியும் அதனுல் உபஹிதனும் அற்பக்ஞத்வாதி குணங்களோடு கூடியவனுமான சைதன்யமும் இதனுல் உபஹிதமில்லாத சுத்த சைதன்யம் இம்மூன்றும் காய்ந்த இரும்புருண்டைபோல் ஒன்ருக இருந்துகொண்டு "த்வம்" பதத்திற்கு வாச்யார்த்தமாகக்கருதப்படுகின்றன. இந்த உபாதி உபஹிதனுக்கு ஆதாரபூதமாயும் அனுபஹிதமாயும் பிரத்யகாநந்த ரூபமாயுமுள்ள துரீய சைதன்யமானது "த்வம்" பதத்திற்கு லக்ஷ்யார்த்தமாகின்றது,

(தொடரும்)

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

ஸ்ரீருத்திரத்தின் மஹிமை.

(ருருரு-வது பக்கத்தொடர்ச்சி.)

இவ்விதம் செவியுற்ற காஷ்மீர வேந்தனுன சந்திரசேனன் ஆச்சரியமடைந்து ஆஹா! சற்சகவாஸத்தின் பயன் என்ன? காமதேனுவைப்போல் எல்லோருக்கும் எல்லாவற்றையும் அளிக்கின்றதே! என் மாயா இருள் மறைந்தது. ஞானக்கண் திறந்

தது. சந்தேகம் துலேந்தது. இக்குமாரர்களின் பூர்வ ஜன்ம விருத்தாந்தம் கேட்கப்பட்டது. ஆகையால் இப்பிறப்பில் எதிர் கால சம்பவத்தையும் கேட்க ஆவல்கொண்டிருக்கிறேன்.

अस्यायुः कति वर्षाणि भाग्यं च वद कीदृशम् ।

இவன் வாழ்நாள் எவ்வளவு காலம்? வித்தை, பாக்கியம், கீர்த்தி பக்தி, சிரத்தை முதலியவைகளை அறிந்து சொல்லவேண்டும் என்று, பராசரரை வேண்ட, பராசரர் தைரியசாலிகளும் கூட, வரும் இன்னல்களை அறிந்து, கலக்கமடைவார்கள். ஆயினும் உன் குமாரன் வயது பன்னிரண்டும் சென்றதால், இன்று முதல் ஏழாம் தினத்தில் உயிர் துறப்பான் என்க, அவ்வார்த்தையானது காலகூட விஷம்போல் மன்னனை மயக்கி, மூர்ச்சையடையச் செய்தது. அவனிடத்தில் கருணை வள்ளலான முனிவர், கீழ் வருமாறு தேர்தல் சொன்னார்.

உலகஸிருஷ்டிக்கு முன்பு, ஜோதிர்மயமாயிருந்த பரம்பிரும் மத்திலிருந்து ரஜோகுணத்தால் பிரும்மாவை ஸ்ருஷ்டித்து அவரிடம் நான்கு வேதங்களையும் எல்லா உபநிஷத்துகளுடைய ஸாரமான ஸ்ரீருத்திரத்தையும் ஈசன் அருள் புரிந்தார். இந்த ருத்திரமானது பிரும்மாவினுடைய தெற்கு முகத்திலிருந்தும் உண்டான யஜுர்வேதத்தின் நான்காவது காண்டத்தின் மத்தியில் நடுநாயகம்போல் விளங்கிற்று. மரீசி, அத்திரி முதலான ரிஷிகள் இதையறிந்து சீடர்களிடம் பரவச் செய்தனர். அவர்கள் புத்திரர்களும் பௌத்திரர்களும் இதையறிந்து எங்கும் பரவச்செய்தனர். ருத்திரத்தை ஜபம் செய்ததினால் மஹாபாபங்களும் உபபாபங்களும் சர்வதோஷங்களும் நாசமுற்று எல்லோரும் வீடு அடைந்தனர். மறுபடியும் பிரும்மன் ஸதஸத்மிச்ரமான பிராணிவர்க்கங்களை ஸிருஷ்டித்து அவைகளுக்கு உரிமையான காரியங்களையும் உண்டாக்கி தர்மாதர்மங்களை விளங்கச் செய்து, தர்மத்திற்கு இந்திரனையும் அதர்மம் செய்பவர்களைத் தண்டிக்க யமனையும் நாயகனாக்கினார். அதர்மத்தின் குமாரர்களான காமக்குரோதம் லோபம் மோகம் மதம் மாத்ஸர்யம், இவர்கள் தம் வசமான ஜீவன்களால் நரகத்தை நிரப்பினர். இவைகள் மேன்மேலும் பாபவி

ருத்திரியைக் குறித்து உலகிற் சுற்றுங்கால் மோக்ஷங்கொடுக்கும். ஸ்ரீருத்திர ஜபம் உலகில் எங்கும் உலாவுவதைக்கண்டு வெருண்டு பயந்தோடி யமனைச் சரணம் புகுந்து ஐயனே உலகினிற் கணமேனும் நிற்கமாட்டோம். உலகில் நடக்கும் ருத்திர ஜபத்தினால் பாபமெல்லாம் நாசமடைய எங்களுக்குவேலை இல்லை என்று செப்பினார்.

இதைக் கேட்டு தர்மராஜன் பிரும்மாவினிடம்சென்று, தேவ தேவனே! பாபம் செய்பவர்களைத் தண்டிப்பதற்காக என்னை நியமித்தீர். இப்பொழுது ருத்திர ஜபத்தால் பாபமே இல்லாமல் நரகம் பாழ்த்து, என் வேலையும் போய்விடும்போலிருக்கிறது என் அதிகாரம் எனக்கு நிலைக்கும்படி உபாயத்தை தேடவேண்டும் என்று வேண்டினான்.

அப்பொழுது பிரும்மன், வருத்தமடையும் யமனைத் தேறுதல் செய்யவேண்டி ருத்திர ஜபத்திற்கிடையூறாக அச்ரத்தையையும் துர்புத்தியையும், சிருஷ்டித்து மனிதர்களிடம் அனுப்ப, அதினால் மனிதர்கள் மயங்கி முயற்சிகுன்றி அனாதரவாய் இருந்தனர். யமனும் தன் காரியம் நிறைவேறினதாக எண்ணினான்.

पूर्वजन्मकृतैः पापैः जायन्तेऽल्पायुषो नराः ।
तानि पापानि नश्यन्ति रुद्रजाप्यवतां नृणाम् ॥
क्षीणेषु सर्वपापेषु दीर्घमायुर्बलं धृतिः ।
आरोग्यं ज्ञानमैश्वर्यं वर्धते सर्वदेहिनाम् ॥
रुद्राध्यायेन ये देवं स्नापयन्ति महेश्वरम् ।
तज्जलैः कुर्वते स्नानं ते मृत्युं सन्तरन्ति च ॥
नमस्तेत्यादिमन्त्रेण शतरुद्रविधानतः ।
एष रुद्रायुतस्नानं करोतु तव पुत्रकः ।
दशवर्षसहस्राणि मोदते भुवि शक्रवत ॥

முன் ஜன்மத்தில் செய்த பாபங்களால் ஏற்படும் ஆயுஸ் குறைவை ருத்திர ஜபத்தினால் பாபநாசமும் ஏற்பட்டு, அதனால் ஆயுள்

ஞானம் ஐசுவர்யம் இவைகள் விருத்தியடைகின்றது. உன்னு டைய இந்த குமாரனும் பதினாயிரம் தடவை ஜபம் செய்த ருத்தி ரஜலத்தினால் ஸ்நாநம் செய்தால் பதினாயிரம் வருஷம் பூலோகத் தில் இந்திரனைப்போல வாழ்ந்து வருவான் என்று கூறினார்.

இதைக் கேட்ட சந்திரஸேனன், பாராசரரை முதல்குருவாக நியமித்து, அனேகாயிரம்பிராமணர்களை வரவழைத்துப்புண்ணிய ஜலத்தினால் நிரப்பிய நூறு கலசங்களை ஸ்தாபித்து, ருத்திரத்தை ஜபித்து, அத்தீர்த்தத்தினால் ஏழாவது தினத்தில் அவ்வரச குமா ரனை அபிஷேகம் செய்யுங்கால் அக்குமாரன், கணப்பொழுது மூர்ச்சித்து விழுந்தான். அங்குள்ளவர்களால் உசிதமான உபசா ரம் செய்யப் பெற்று களை நீங்கி சமாதானமடைந்து சூழ்ந்துள்ள மனிதர்களைப்பார்த்து பெரியோர்களே! கையில் ஏந்திய தடியு டன் பயங்கரமான கோரப்பல்லுடன் என்னைக்கொல்வதற்காக வந்த ஓர் புருடனை, மஹாவீரர்களான தூதர்கள் கட்டி இழுத்துச் சென்றனர். நான் உங்களால் கார்க்கப்பட்டேன் என்று சொல் வதைக் கேட்டு பிராமணோத்தமர்கள் ஆசீர்வதித்து அறுசுவையு டன் கூடிய அன்னமருந்தி, ஸபையில் உட்கார்ந்திருந்தனர்.

அச்சமயம் தேவலோகத்திலிருந்து நாரதமகரிஷிதோன்ற, அவரை எல்லோரும் எதிர்கொண்டு வரவேற்று, வந்தனம்செய்து ஆஸனத்தில் உட்கார்த்திவைக்க அரசன் அவர்கண்ட அத்புதங் களைத் தெரிவிக்கும்படி வேண்டினான். அதற்கு நாரதர் ஆகாயத் திலிருந்து இறங்கிவரும்பொழுது மிருத்தியுவானவன் உன் புத் திரனைக் கொல்லுவதற்காக மிகவும் கோபத்தோடு, கையில் தண் டத்தோடும்கூட வந்தான். இதை அறிந்த ஈசன் வீரபத்திரரைச் சிவகணங்களோடு அனுப்பினார். உன் புத்திரனைக் கவரவந்த யமனை கயிற்றினால்கட்டி, வெருட்டி கோபத்தோடு சதாசிவன் சன்னிதிக்கு இழுத்துச்சென்றனர். இதை தூதர்களினால் தெரி ந்துகொண்டு யமன் ஓடோடியும்வந்து, தலையால் வணங்கி, கை கூப்பி "ஓ வீரபத்திரதேவனே, குற்றமில்லாத மிருத்யுவினிடத் தில் ஏன் இவ்வளவு கோபித்துக்கொள்ளவேண்டும்." அவன் வினைப்படி காலம்சென்ற அரசகுமாரனை அழைக்கவந்தான். அவ னிடமுள்ள குற்றம் என்னஎன்று வினவ, (பதினாயிரம் வயதுள்ள

இக்குமாரனை) ருத்திரஜபம் செய்த தீர்த்தத்தினுல் இக்குமாரனு க்கு வயது பதினுயிரம் விருத்தியடைந்து இருக்கிறது. உனக்குச் சந்தேகமுண்டானுல் சித்ரகுப்தனைக்கூப்பிட்டு விசாரித்துக்கொள் என்று கூறினதும், சித்ரகுப்தனைக் கூப்பிட்டு விசாரிக்க, அவன் முதலில் பன்னிரண்டு வயது என்றும், பிறகு பதினுயிரம் வயது என்றும் எடுத்துரைத்தான். அதைக்கேட்டு யமன் பயந்து வீர பத்திரரை நல்வார்த்தைகளால் சந்தோஷப்படுத்தி, மிருத்யுவை மீட்டுக்கொண்டு தன் நகர் ஏகினுன். வீரபத்திரர் கைலாயமேக, யான் இங்குவந்தேன். ஆகையால் உன் குமாரன் ருத்திரத்தின் மஹிமையினுல் மிருத்யு பயத்தையிழந்து பதினுயிரவருடம் சுக மாய் வாழ்ந்துவருவான் என்று ஆசிகூறி சுவர்க்கலோகம் செல்ல, மற்றுமுள்ள முனிவர்களும் தம்தமிருப்பிடம் சென்றனர்.

இவ்விதம் ருத்திரத்தின் மஹிமை பிர்மோத்திரகண்டம் இரு பத்தோராம் அத்தியாயத்தில் கூறியுள்ளது.

N. வெங்கிடராமன்,
காட்டுமன்னுர் கோயில்.

வேதங்கள் அபௌருஷேயமானவை.

(சகூரு-வது பக்கத்தொடர்ச்சி)

यतस्त्वा हरिणा दृष्टाः श्रुता एवापरैर्जनैः ।
श्रुतयो दृष्टयश्चेति तेनोच्यन्ते पुरातनैः ॥

வேதங்கள் விஷ்ணுவினுல் பார்க்கப்படுவதால் 'திருஷ்டி' என்றும் இதர ஜனங்களினுல் கேட்கப்படுவதால் 'சுருதி' என்றும் பிரா சீனர்களால் சொல்லப்படுகின்றன. திருஷ்டி என்ற பெயர் வேதம் அபௌருஷேயம் என்பதற்கு ஒரு யுக்தி வேதங்களை விஷ்ணு பார்த்தாரே ஒழிய இயற்றவில்லை. ஆகையால் அபௌருஷேயம் புருஷ ஸூக்தத்தில் "ரிக்வேதங்கள், ஸாமவேதங்கள் உண்டாயின" என்று சொல்லப்பட்டிருக்கிறதே என்றுல்

तदुत्पत्तिवचश्चैव भवेद्व्यक्तिमपेक्ष्य तु ।
चेतनस्य जनिर्यद्वदुच्यते सर्वलौकिकैः ॥

எப்படி அனாதியான ஜீவன் பாஹ்யதேஹ ஸம்பந்தமடைந்து வெளிப்படுவதை (வியக்தமாகுவதை) உலகிலுள்ள எல்லாஜனங்களும் "ஜீவன் பிறக்கிறான் என்று சொல்கிறார்களோ அவ்விதம் அனாதிகாலமாயுள்ள வேதங்கள் வியக்தமாயினவென்று அர்த்தம்

இதே விஷயம் பிரஹ்மாண்ட புராணத்தின் பிரதேசாந்தரத்தில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

वेदानां सृष्टिवाक्यानि भवेयुर्व्यक्त्यपेक्षया ।
अवान्तराभिमानानां देवानां वा व्यपेक्षया ।
नानित्यत्वात्कुतस्तेषां अनित्यत्वं स्थिरात्मनाम् ॥ इति ब्रह्माण्डे ॥

எப்படி தேவதைகளுக்குச் சரீரஜன்மத்தை யபேக்ஷித்து அவர்கள் பிறக்கிறார்களென்கிறோமோ அப்படியே வேதங்கள் உண்டாயின என்றவாக்யங்களும் அவைகளின் வியக்தியை உத்தேசித்தேதான் பிரவிருத்தமாயிருக்கின்றன. அநாதிநித்யம் என்று பிரமாண ஸித்தமான அவைகளுக்கு அநித்யத்வம் எப்படித்தகும்?

புருஷஸூக்தத்தில் "பிறந்தன" என்று ஸ்பஷ்டமாகவே இருக்க அப்பதத்திற்கு "வியக்தமாயின" என்று அர்த்தம் சொல்வது எப்படித்தகும்?

அவ்விதம் அர்த்தம் செய்வதற்கு இரண்டு காரணங்கள்உள. வேதங்கள் அநாதியானவை என்பது முற்கூறப்பட்ட பல பிரமாணங்களால் தெரியவருகிறது. அநாதியான ஒரு வஸ்துவுக்கு பிறப்பு தகாது. ஆதலின் அவ்விதமே அர்த்தம் சொல்லவேண்டும். இரண்டாவதாக அச்சூக்தத்தில் ऋचः सामानि जज्ञिरे "ரிக், ஸாமங்கள் பிறந்தன" என்ற வாக்யத்தின் முன்னர், "அதனால் (மந்திரத்தினால்) தேவர்கள் யாகம் செய்தனர்." तेन देवा अयजन्त என்று கூறப்பட்டிருக்கிறது யாவரும் அறிந்ததே. வேதங்கள் பிறப்பதற்கு முன்னரே வேதமந்திரங்களினால் எப்படி யாகம் செய்யக்கூடும்? வேதமந்திரங்களல்லாது இதர மந்திரங்களினால் யாதொரு கர்மமும் செய்யமுடியாதென்பதும் அவை உண்மையில் மந்திரங்களேயல்ல என்பதும் யாவரும் ஒப்புக்கொண்ட

விஷயமே! ஆகையால், ரிக், ஸாமங்கள் பிறப்பதற்கு முன்னரே வேதம் இருந்ததென ஏற்படுவதால் அவ்விதவேதங்கள் பிறந்தன என்பதற்கு நாம் கூறிய அர்த்தமும் ஏற்றதே. இவ்விஷயத்தில் யுக்திமல்லிகையிலுள்ள ஓர் சுலோகத்தையும் உதாஹரிப்போம்.

ऋक्सामादेरभावे प्राक् यज्ञः सोऽज्ञ कुतो भवेत् ।
देवास्तेनायजन्तेति पूर्वां श्रुतिमनुस्मर ॥५३॥

"ஏ மூடனே! ரிக் ஸாமங்கள் இல்லாதிருக்கும்போது (உண்டாவதற்கு முன்னரே) அந்த (தேவர்கள் இயற்றிய) வேள்வி எப்படி நடைபெறும்? 'அதனுல் தேவர்கள் யாகம் செய்தனர்' என்ற பூர்வ சுருதியை மறந்துவிட்டாய்போலும்! ஞாபகப் படுத்திக் கொள்."

(6) வேதங்கள் நித்யமல்லாதிருப்பின், சுருதி, வேதம், முதலிய பெயர்கள் அவைகளுக்கு ஏற்பட்டிராது. மேலும், "அவர் இம்மந்திரத்தைத் தரிசித்தார்" என்ற வேதத்தினுல் ஈசுவரர் முதலிய வேதத்ரஷ்டாக்கள் உண்டென்று அனைவரும் ஒப்புக் கொண்ட விஷயம். தரிசனம் என்பது பூர்வம் இருந்த வஸ்துவுக்குத்தான் ஏற்படும். ஆகையால் நித்யம் என்று ஏற்படுகிறது. இவ்வித நித்யத்வம் பிரளயம் வரையில்தான், மறுபடியும் சிருஷ்டி காலத்தில் வேறு வேதங்கள் உண்டாகின்றன என்பதும் ஏற்றதன்று.

(7) ஸ்ரீமத் பகவத்கீதை:—

सर्गेऽपि नोपजायन्ते प्रलये न व्यथन्ति च ।

வேதங்கள் சிருஷ்டிகாலத்தில் உண்டாவதுமில்லை. பிரளயத்தில் நாசமடைவதுமில்லை.

(8) தத்வஸங்க்யானம்:—

नित्या वेदाः पुराणाद्याः कालः प्रकृतिरेव च ॥

"வேதங்கள், புராணங்கள் முதலியவை காலம், பிரகிருதி, இவை எல்லாம் நித்யமானவை."

இவ்வாறாக வேதங்கள் அபௌருஷேயமென்று நிரூபிக்கப் பட்டதால் ஒருவரும் வேதத்தைச் செய்யவில்லை என்பதை நாம் அடிக்கடி வற்புறுத்தவேண்டியதில்லை. ஆயினும் சிலர் வேதங்

களை ஈசுவரன் பிரஹ்மாதிகளுக்குப் போதிப்பதால் அவரே தான் வேதகர்த்தாவென தப்பாகக் கருதுகிறார்கள். அவ்விஷய த்தையும் யுக்திமல்லிகையிலிருந்தே இரண்டு சுலோகங்களினால் நிராகரிப்போம்.

निद्राविद्रावणे यस्य छन्दांसि किल बन्दिनः ।
तं वेदं स कथं कुर्यात् .... ॥५५॥

ஸ்துதி பாடகர்கள் (வந்திகள்) விடியற்காலத்தில் படுத்துறங்கும் சக்ரவர்த்தியை அவனுடைய வீரச்செயல்களைக்காட்டும் சுலோ கங்களைச் சொல்லி எழுப்புவதுபோல், பிரளயகாலத்தில் இந்த உலகங்களனைத்தையும் தம் உதரத்தில் உபஸம்ஹாரம் செய்து கொண்டு யோகநித்திரைபுரியும ஸ்ரீ பரமாத்மாவை சிருஷ்டிக்க வேண்டிய சமயத்தில் வேதங்கள் துதிசெய்து எழுப்பின. அத் துதிக்குச் சுருதி கீதை எனப் பெயர். அசேதனமான வேதங்கள் எழுப்பும் சக்தியுடையவனவா எனின், அவைகளின் அபிமானி தேவதையான துர்க்கை ஸ்தோத்திரம் செய்தாள் என்று அர்த் தம். எப்பொழுதும் விழித்துக்கொண்டிருக்கும் பகவானை வேதங் கள் எழுப்புகின்றனவென்பது பொருந்துமா என்றால் எழுப்புவது போல என்று அர்த்தம். (ஸ்ரீமத் பாகவதம், தசமஸ்கந்தம் அத் தியாயம் 87)இவ்விதம் எழுப்பப்பட்ட பின்னரே வேதங்களை ஈசு வரன் செய்யவேண்டுமல்லவா! "எவனைத் தூக்கத்தினின்று எழு ப்புவதில் வேதங்கள் ஸ்துதிபாடகர்களாக விருந்தனவோ அப் பேர்ப்பட்ட வேதத்தை அவனெப்படிச் செய்யக்கூடும்?" வேதங் களை இயற்றியவராகக் கருதப்படும் பகவானையே வேதங்கள் எழு ப்பினபடியால் அவைகள் ஈசுவரனால் செய்யப்பட்டவையல்ல.

यस्यास्ति पुस्तकं हस्ते हयास्यस्य विधेर्गुरोः ।
स च वक्तानादिनित्यसिद्धबुद्धिक्रमात्मकम् ॥

ஒரு புஸ்தகத்தை நமக்குப் போதிக்கும் உபாத்தியாயர் அவ்விதம் உபதேசிப்பதால் அப்புத்தகத்திற்கு ஆசிரியரா? முன்னரே இருக் கும் பாடங்களைத்தான் கற்றுக்கொடுக்கிறார். அதுபோல் "அநாதி காலமாய் இருந்துவரும் வேதங்களையே நான் உபதேசிக்கின் றேன்" என்ற விஷயத்தை அநேக பகவதவதாரங்களில் ஒன்றா கிய ஹயக்ரீவாவதாரத்தில் தன் கையில் ஓர் புஸ்தகத்தைப் பிடி

த்து நமக்கு நினைப்பூட்டுகிறார். இதனாலும் ஈசுவரன் வேதத்தின் ஆசிரியரல்லர் என்பது ஸ்பஷ்டம்.

कन्या कुमारी कन्यात्वं यथा भर्तुरभावतः ।
लेभे श्रुतिकुमारीयं तथा कर्तुरभावतः ।
अकृतत्वं ध्रुवं लेभे या नित्येति श्रुतौ श्रुता ॥

யுக்திமல்லிகை சு. 101.

கன்யாகுமாரி முனையின்கண் வீற்றிருக்கும் அம்பாளுக்கு விவாஹமாகவில்லை. அவளுக்குக் கணவன் இல்லையாதலால் கன்யாகுமாரி (விவாஹமாகாதவள்) என்று அழைக்கப்படுகிறாள். அதுபோல் நமது சுருதி குமாரிக்கும் கர்த்தா ஒருவனில்லையாதலால் **वाचा विरूप नित्यया** முதலிய பல சுருதிகளில் "ஒருவராலும் செய்யப் படாதவள்" என்று அழைக்கப்படுகிறாள்.

முடிவுரை:—மேற்கூறியவாறு, வேதத்தின் ஸ்வருபத்தையும் அபௌருஷேயம் என்பதையும் அறிந்துகொண்ட நாம் **विधिनियताः मनुष्याः** மானிடர்கள் விதியின்படியே ஒழுகவேண்டுமாதலால் **श्रुतिस्मृती हरेराज्ञा** என்றபடி ஈசுவரனின் ஆக்ஞாரூபமான சுருதி ஸ்மிருதிகளையொட்டி நடந்துகொள்ளவேண்டியது அவசியம்.

M. ராமராவ்,
ஸ்ரீ மாத்வஸபையின் காரியதரிசி,
கும்பகோணம்.

ஆர்ய மாணவர்களின் மதவித்யாப்யாஸம்.

அதன் முற்கால தற்கால நிலை.

பழைய காலங்களில் நடைபெற்றுவந்த திண்ணைப்பள்ளிக்கூடப் படிப்புகள் அநாகரிகமானவை என்று இக்காலத்தில் சிலர் கருதலாம். ஆனால் அவற்றில் போதிக்கப்பட்டுவந்த நீதிபாடங்களிலொன்றை இங்கு கூறுவோம்.

विद्या विवादाय धनं मदाय शक्तिः परा लोकनिपीडनाय ।
खलस्य साधोर्विपरीतमेतद्दानाय मानाय च रक्षणाय ॥

ஆத்மஞானத்திற்குப் பயன்படவேண்டிய கல்வியை வீண் விவாதத்தில் உபயோகிப்பதும், செல்வம் வந்தகாலத்தில் அதனை உபயோகிக்கும் வகையறியாது 'மத'ங்கொள்வதும், உடல் தெம்பிருப்பின் அதனைக்கொண்டு எளியோர்களை ஹிம்ஸிப்பதும் துஷ்டனுக்கு இயற்கை. ஆனால் மேலோர்கள் தமது வித்யா ஞானத்தைப் பிறருக்கு வழங்குவதிலும், செல்வத்தைப் பரோபகாரத்திற் செலவிடுவதிலும், உடல்வலிமையைப் பிற உயிர்களைப் பாது காப்பதிலும் விநியோகிப்பது வழக்கம்.

இந்த ஒரு மொழியினால் உலகத்திற்கு எவ்வளவு சிறந்த உபதேசங்கிடைக்கின்றது? ஆங்கில கலாசாலைகளில் ஸம்ஸ்கிருத பாஷை கட்டாயப்பாடமாக இல்லாமையால் மாணுக்கர்களுக்கு இதுபோன்ற நீதிபுகட்டி, சிறந்த அறிவுபக்குவம் கலாசாலைகளில் ஏற்படுவதில்லை. பிற பாஷைகளிலுள்ள நீதிநூல்களை மாணுக்கர்களுக்கு போதித்தே வருகிறார்களென்பதை நாமும் ஒப்புக்கொள்வோமாயினும், "ஆசார வாழ்க்கையையும் சேர்த்துப்போதிக்கும் நீதிமுறை" அவற்றில் காணப்படவில்லை. எவ்வித மதசம்பந்தமுமில்லாத 'ஸன்மார்க்கப்படிப்பு' புகட்டுவதாகக்கூறி, மதப்படிப்பை உபயோகமில்லாத சரக்கென்று உதறிவிட்டகாலம் முதல்தான், இந்தியாவில் ஸன்மார்க்க வாழ்க்கையழிந்தது ஏனெனின், இவர்கள் கூறுகின்ற ஸன்மார்க்கப்படிப்பு நாஸ்திகமதத்தில் கொண்டுவிடுவதே காரணமாகும். ஆதலால்,

इह सन्तो न वा सन्ति .... ?

"இங்கு நல்லோர்களில்லையா! அல்லது அவர்கள் தெரிவித்த நன்மொழியை நீ செவியில் போட்டுக்கொள்ளாது நடக்கின்றனையா!" என்று ஸ்ரீ ஸீதாதேவி வினவியதுபோல் ஒரு காலத்தில் பிறதேசத்தினரும் இந்தியரைப்பார்த்து "நீங்கள் உங்களுடைய உத்தம மதத்தை ஏன் இந்தியாவிலுள்ள வித்யாலயங்களிலெல்லாம் போதிக்குமாறு செய்யவில்லை" எனக் கேட்பின், அதற்குரிய ஸமாதானங்கூறுமாறு இந்தத் தலைமுறைக்குள் ஏதேனும் நாம் வழிசெய்யவேண்டும். அவ்வாறு செய்யின், நம்முடையவேலை அரசாங்கத்திற்கும் நல்ல உதவிசெய்யும். அதாவது மதம் என்பது ஆஸ்திகமதத்தைப் பின்பற்றிய ஸன்மார்க்கத்தில் ஜனங்களைவாழச்

செய்வதாதலால் அரசாங்கத்தின் முதுகெலும்பே மதத்தைப் பின்பற்றிய ஸன்மார்க்கமாயிருந்து பாதுகாக்கின்றது என்பது பொருள்.

ஆஸ்திக மதத்தையும்—ஸங்மார்க்கத்தையும் பிணித்திருக்கின்ற சரடுகள் எவ்வளவு முறுக்கேறியிருக்கின்றதோ அவ்வளவும் ராஜசக்தியை சாசுவதமாயும் வலுவாயும் நிலைநிறுத்தும். இக்காரணங்களை ஆலோசிக்கும்பொழுது இதர வித்யாப்யாஸத்தோடு மதவித்யாப்யாஸத்தையும் சேர்த்தல் நல்லதும் மாணவர்களின் மனத்திற்கு இன்பந்தருவதுமாகுமென்று ஏற்றுக் கொள்ளலாம். வித்யைக்கு ஜீவன்மதந்தான் என்பதும் அல்லாமல், தேசத்திற்கே மதவித்யாப்யாஸந்தான் ஜீவனென்றுங்கூறலாம். மதவித்யாப்யாஸம் இல்லாத கல்வி உயிரில்லாத சரீரம்போன்றதே. பர்மா கவர்னர் இதை எக்காரணத்தாலோ உணர்ந்து அத்தேசத்தின் மதத்தில் தேர்ச்சிபெற்ற 1948-பண்டிதர்களையும் சேர்த்துப் பரீக்ஷை நடாத்தி சம்மானஞ்செய்திருக்கின்றார். இந்தியாவில் அப்படி ஏதேனும் நடந்தால் நலமன்றோ? தெய்வத்தைமறவாமல் ஜனங்கள் வாழ்வது தேசத்திற்கும் லோகத்திற்கும் க்ஷேமம் என்றால், அவ்வித க்ஷேமத்தை மிகவும் விருத்திசெய்வது மதவித்யாப்யாஸந்தான்! மதத்தின் கௌரவத்தைக் குறைத்தால் அதற்குரிய குறைவை உலகத்திலும் தாராளமாகக்காணலாம். உண்மையான மதவித்யாப்யாஸம் எங்கு குறைகின்றதோ அங்கு ஸங்மார்க்கமும் தடைபட்டு நிற்கத்தான் செய்யும் ஜனங்களுக்குள் சுயேச்சையானபோக்கும், பரஸ்பர உதவியின்மையும் அராஜகத்வமும் சரியான பக்கபலமில்லாமலும் வளரவும் தொடங்கும். ஆகவே, இவ்விதத் தொல்லைகளையெல்லாம் நீக்குவதற்கு 'ஏகமூலிகாப்பிரயோகம்' ஆஸ்திகமதவித்யாப்யாஸத்தை மாணாக்கர்களுக்குக் கட்டாயமாய்ச் செய்விப்பதுதான்! சரித்திரப் பிரஸித்திபெற்ற ஆசாரியர்களும் மஹாபுருஷர்களும் மதப்பிரசாரத்தின் மூலமாக எவ்வளவு வேலை செய்திருக்கிறார்கள் என்பதை யோசித்துப் பார்க்கும்பொழுது மதத்தின் சக்தி தெரியவரும்.

பழைய காலங்களில் பள்ளிக்கூடப் படிப்புத் தொடங்கும்பொழுதே "ओं नमो नारायणाय– ஹரிநமோத்துசித்தம்" என்ற மஹா மந்திரத்தை பாலர்களுக்குப் போதித்து, ஸ்ரீ ஸரஸ்வதி தேவியின் பிரார்த்தனையோடு ஸாரஸ்வத பீஜாக்ஷரத்தையும் பாலில் எழுதி உட்கொள்ளச்செய்து, வாக்தேவியின் கடாக்ஷம் கிடைக்குமாறு செய்தனர் பெரியோர். இப்பொழுது கல்வி தொடங்கும்பொழுதே A B ......என்ற ஷட்விம்சாக்ஷரீ மந்திர

மாவது (I) அல்லது "காலில்லாதவன் நொண்டி, கண்ணில்லாதவன் குருடன்!" என்பதுபோன்ற பிரபல தத்வங்களை மேனுட்டு முறைப்படி நவீனமாகக்கண்டு பிடித்தாவது போதிக்கின்றனர். இதில் தெய்வபக்தி மணம் எவ்வளவுதூரம் வீசுகின்றது என்பதை யாரும் வியாக்யாநம் செய்யவேண்டியதில்லை.

மனிதனுடைய மனம் புத்தியைப்பற்றி பொழுகுகின்றது. புத்தியைப்பின்பற்றி ஒரு ஊழியன்போலும் வேலை செய்வதே மனத்தின் சுபாவம். மனம் சஞ்சரிக்கின்ற பாதையில் வெளிச்சம் காட்டுவது புத்தி. ஆதலால், இதர வித்யாப்யாஸ முறையோடு கூட அவரவர்களின் மதவித்யையைப் போதித்து 'புத்தியானது' போஷிக்கப்பட்டாலன்றி அது மனதை சரியான வழியில் நடத்தத் திரமைபெருது.

ஹிந்துக்களின் முறைப்படி சிறிதேனும் மதவித்யாப்யாஸம் (கலாசாலைகளில்) செய்யப்படுமாயின் மாணுக்கர்கள் யாவரும் குருவை தெய்வமாகப் போற்றி நன்மை பெறுவர்.

यस्य देवे परा भक्तिः यथा देवे तथा गुरौ ।
तस्यैते कथिता ह्यर्थाः प्रकाशन्ते महात्मनः ॥

எவனுக்கு தெய்வத்தினிடத்திலும், குருசரணுரவிந்தங்களிலும் நிறைந்த பக்தியிருக்கின்றதோ, அவனுக்கு 'குருநாதன் உபதேசித்த பொருள்களும்—அவர் உபதேசியாத பொருள்களுங்கூட—பிரகாசிக்கும் என்பது ஹிந்துமதத்தின் சிறந்த உபதேசமாகும். இவ்வித மனவுறுதியினுல் நன்மையடைந்த மஹான்களின் சரித்திரங்கள் அளவிடற்கரியன. கலாசாலை மாணவர்களுக்கு இவ்வித உபதேசம் இப்பொழுது கிடைக்கின்றதா?

"அவரவரின் சரீரக் கூறுக்கேற்ற உணவுகளை அவரவர் உபயோகிக்கவேண்டும்" என்று இந்த ஸ்தூலசரீரத்திற்கு உரிய சுகாதாரக் கல்வி போதிக்கப்படுவதுபோல், ஆத்மாவின் நன்மைக்கு மிகமிக் அவசியமான மதப்படிப்பு—அவரவர்களின் மதத்திற்கு உரியவாறு போதித்து மானஸிக சரீரத்தைப் போஷிக்கவேண்டாமா? இந்த அவசியத்தை உணர்ந்து காசி ஸ்ரீமான் பகவான் தாஸ் என்பவர் ஒரு தேசிய வித்யாப்யாஸ முறையை வெளியிட்டு அதை பண்டிதர்களின் விமர்சனத்திற்கு விட்டிருந்தார். அதன் பலரூப பரிணமம் விரைவில் ஸித்தித்தால் நல்லதாகும். வட இந்தியாவின் சில பாகங்களிலும் இவ்வித முயற்சியில்லாமலில்லை. தமிழ் தேசம்மாத்திரம் இந்த முயற்சியில் இன்னும் போதுமான

படி ஈடுபடவில்லை. அதனால் நல்ல பயன்கிடையாமல்போவது டன், விபரீத பலனைவருவிக்கவும் காரணமாயிருப்பதை இங்கு குறிப்பிடாமலிருக்க இயலவில்லை. உதாரணமாக:—

அதிசமீபகாலத்தில் "இந்திய சரித்திரம்" என்ற புத்தக மொன்று ஆங்கிலத்திலும் தமிழிலும் இரண்டு மூன்று பாகங்க ளாக வெளியிடப்பட்டுள்ளது. அதனை எழுதிய கனவான் உயர்த ரப்படிப்புவாய்ந்தவராயிருப்பதுடன் வேதசாஸ்திரங்களின் பெரு மைகளைப் பாதுகாக்கவேண்டிய சிறந்த வம்சத்திலும் ஜனித்தவர். இவ்வளவு விசேஷம் பொருந்திய அந்த நண்பர் ஷை இந்திய சரித்திரம் என்ற நூலில் வேதங்கள் அதிஸமீபகாலத்திலுண்டான தாகவே ஸித்தாந்தஞ் செய்திருக்கின்றார். அந்தப் புத்தகம் ஆங் கில பாடசாலைகளில் பாட புத்தகமாகவும் அங்கீகரிக்கப்பட்டிருக் கின்றது. ஹிந்துமதப் பிரமாணங்களில் மூர்த்தந்யமாகிய வேத மே அதிஸமீபகாலததில் 'கல்பிதம்' என்று நம் மாணவர்களுக்கு அதிபால்யத்தில் போதித்து, அந்தக் கொள்கையே அவர்களின் உள்ளத்தில் பசுமரத்தாணிபோல் பதியும்வண்ணம் இடங்கொடுத் தால் அவ்வாலிபர்க்கு வயோதிகர்களான பிறகு ஆர்யமததத்தில் எவ்வளவு மதிப்பு வைப்பார்களென்பதை ஆர்யமதாபிமானிகள் கவனிக்கவேண்டும். இப்புத்தகம் சரித்திரமுறையிலும் ஸரியாக எழுதப்படவில்லை என்று 'மாடர்ன்ரிவ்யூ" என்ற ஆங்கிலபத்தி ரிகை ஒரு விமர்சனஞ் செய்திருப்பதாகத தெரிகின்றது. ஆர்யர் களின் மதாசாரங்களை இழிவுபடுத்தி லண்டனில் ஒரு புத்தகம் வெளியிட்டிருக்கின்றனர். அந்தப் புத்தகத்தை அந்நாட்டினர் உண்மையென்றே அங்கீகரிதது இந்தியர்களை அநாகரீகர்களாகக் கருதுகிறார்களென்றும், அவ்விதஞ் செய்தலை இந்திய மேதாவி கள் கவனித்து, உண்மையான இந்தியசரித்திரத்தை வெளியிட வேண்டுமென்றும் அதே "மாடர்ன்ரிவ்யூ" வற்புறுத்தியிருக்கின் றது. மதசம்பந்தமான படிப்பிற்கு கௌரவம் கொடுப்பது வேத மாதலால், அதன் பொருளை உணராது செய்யப்படும் நூல்களை யும் அவற்றின் பிரசாரத்தையும் தடுக்கும்வழியை யோசிக்கவேண் டும். முன் தெரிவித்த நூல்களைப் பண்டிதர்கள் கவனித்து அவை களிலுள்ள பிழைகளைமறுத்து, சரியான கருத்துக்கள் அமைந்த தும், உண்மை யமைந்ததுமாகிய இந்திய சரித்திரத்தை வெளி யிட்டு அவைகளையே பாடபுத்தகமாக்கவும் முயற்சித்தால் இந்த வியாசத்தில் குறிப்பிட்ட தீங்குகள் நீங்கி, இந்திய மாணவர்களு க்கு மதவிஷயமான படிப்பால் பக்திசிரத்தை மிகவும் தோன்றும்.

ஸ்ரீ ஜாநகீஜாநி:.